செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

**நடத்தும்**

## பயிலரங்கம் - 05

**(15-05-2024 முதல் 21-05-2024 வரை)**

அறிவிப்பும் அழைப்பும்

# தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்

## Cēyōṉ in the Heritage of Tamil Classical Literature

உலக மாந்தர் இனங்களில் தொன்மையும் தனித்தன்மையும் பெற்றவர்களுள் தமிழர் இனமும் ஒன்றாகும். தமிழர்களின் வாழ்வியல் முறையானது இயற்கையோடு இயைந்ததாகும். தமிழர்கள் தாம் வாழும் நிலப்பரப்பினை நானிலமாகப் பிரித்துத் தம் நில அமைப்பிற்கேற்ப கால்நடை வளர்ப்பு, தேனெடுத்தல், பயிரிடுதல், மீன்பிடித்தல் என வாழ்வியல் சூழலை அமைத்து, இயற்கையமைப்போடு தங்களையும் இணைத்துக்கொண்டே வாழ்ந்தனர். இவ்வாறு தமிழர்களின் பன்னெடுங்கால வாழ்வியல் தொடர்ச்சியின் விளைவாகத் தோன்றிய இலக்கண இலக்கியங்களின் வாயிலாக அவர்களின் பண்பாடு, நாகரிகம், வாழ்வியல் போன்றவற்றை அறிந்து கொள்ளலாம்.

தமிழில் கிடைத்துள்ள முதல் இலக்கண நூலான தொல்காப்பியம் மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்று நால்வகைத் தெய்வங்களைக் குறிப்பிடுகிறது. இவற்றுள் மலையும் மலைசார்ந்த இடமான குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகச் “சேயோன்” சிறப்பிக்கப்படுகிறார். ‘சேய்’ என்னும் சொல் சிவப்பு, செம்மை, இளமை,

தலைவன் என்னும் பல பொருண்மையை உள்ளடக்கியதாகும். தமிழ் இலக்கியப் பரப்பில் குறிஞ்சி நிலத் தெய்வமான சேயோன் ‘முருகு’ என்னும் பெயரில் பெரும்பான்மையான இடங்களில் சுட்டப்படுகிறார். ‘முருகு’ என்னும் பெயர்ச்சொல் இளமை, முருகன், தெய்வம் என்று பல்வேறு பொருண்மைகளைக் கொண்டுள்ளது. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள “முருகாற்றுப்படுத்த” (22:11) என்ற தொடரின் மூலம் முருகனிடம் மக்களை ஆற்றுப்படுத்தும் மரபு இருந்ததை அறியலாம். மேலும் “முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்” (56:14) என்ற புறநானூற்றுப் பாடலடியின் மூலம் எண்ணியவற்றை முடிக்கின்ற ஆற்றலை உடையவன் முருகன் என்ற செய்தியை அறியமுடிகிறது.

வெறியாடுதல் என்பது தமிழர் வழிபாட்டு மரபில் தொன்றுதொட்டு வரும் முறையாகும். தொல்காப்பியப் புறத்திணையியலின்,

“வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டயர்ந்த காந்தளும்” (தொல்.1006)

என்ற நூற்பா வேலன் வெறியாடுதலைக் கூறுகின்றது. குறுந்தொகையில் “முருகயர்ந்து வந்த முதுவாய் வேல” (362:1) என்று முருகன் மக்களின் மீது இறங்கிவரும் குறிப்பு இடம்பெற்றுள்ளது. மேலும் அகநானூறு, புறநானூறு போன்ற செவ்விலக்கியங்களிலும் சேயோன் குறித்தப் பல செய்திகள் இடம்பெற்றுள்ளன.

தமிழ்ச் செவ்விலக்கியங்களான அகநானூறு, புறநானூறு, பரிபாடல், நற்றிணை, ஐங்குறுநூறு, திருமுருகாற்றுப்படை, மலைபடுகடாம் போன்ற இலக்கியங்களில் சேயோனைப் பற்றிய குறிப்புகள் விரவிக்கிடக்கின்றன. தொல்காப்பியத்தில் தொடங்கிய சேயோன் வழிபாடு, அதன் தொடர்ச்சி, தனித்தன்மை ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் சுவடியியல் புலத்தின் சார்பாகத் **“தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்”** என்னும் பொருண்மையில் ஏழு நாள் பயிலரங்கம் நடைபெற உள்ளது.

இப்பயிலரங்கில் **“தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்”** குறித்தத் தொன்மை வழிபாட்டுச் சிறப்பினை விளக்கும் வகையில் அறிஞர்கள் உரையாற்ற உள்ளனர்.

சேயோன் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் தமிழியல் சார்ந்த ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 15.05.2024 முதல் 21.05.2024 முடிய 07 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: முற்பகல் 10.00 - 1.00 மணி, பிற்பகல் 2.00 - 5.00 மணி.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. இந்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழி விண்ணப்பத்தை நிறைவுசெய்து அனுப்ப வேண்டும்.
8. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழ்வரும் **அனுமதிக் கடிதத்தைப்** பதிவிறக்கம் செய்து, உரியவரிடம் ஒப்பம் பெற்று இணையவழி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.
9. இணையவழி விண்ணப்பம் https://forms.gle/drzR2eJR1aoyGpXr8 என்ற இணைப்பின் வழியாக அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகக் கிடைக்கப்பெறும்.

10. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
11. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
12. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் புலனம்/ மின்னஞ்சல் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
13. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய இறுதி நாள்: 02.05.2024. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.

14. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 06.05.2024 அன்று மின்னஞ்சல்/ புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
15. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ளவேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருவதைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
16. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிகளைப் பின்பற்றிட வேண்டும்.

# அனுமதிக் கடிதம்
# Permission Letter

திரு./திருமதி/முனைவர் ……………………………………………………………………

அவர்களைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 15.05.2024 முதல் 21.05.2024 வரை நடத்துகின்ற "தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் சேயோன்" என்னும் பயிலரங்கில் பங்கேற்க அனுமதியளிக்கிறேன்.

நெறியாளர் / துறைத்தலைவர் / முதல்வர் / பதிவாளர்
Ph.D Guide / Head of Department / Principal / Registrar
(உரிய முத்திரையுடன் கையொப்பம்)